**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை**

**O.S. No. 35/2020**

**2024 ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 08 ம் நாள் வியாழக்கிழமை**

**வா.சா.1 நிலபர்நிஷா**

**கு.வி (தொடர்ச்சி)**

என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.8 ஆவணத்தில் உள்ள திருத்தங்கள் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு செய்யப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.8 ஆவணத்தைப்பற்றி எனக்கு தெரியாது, அது என்ன ஆவணம் என்று எனக்கு தெரியாது. வா.சா.ஆ.8 ஆவணத்தைப்பற்றி எந்த விபரமும் எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் பற்றிய விபரம் எனது வழக்கறிஞருக்குத்தான் தெரியும். எனது அண்ணன் பெயர் அப்துல் சலீம். அவர் இந்த வழக்கின் 2ம் வாதி. எனக்கு இந்த வழக்கு விபரம் சிறிது மட்டும் தான் தெரியும். முழு விபரம் எனது வழக்கறிஞருக்குத்தான் தெரியும். இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் பற்றிய விபரம் எனக்கு தெரியும். வா.சா.ஆ.8 ஆவணம் சொத்து பிரிக்கப்பட்ட ஆவணம். வா.சா.ஆ.8 ஆவணம் முகம்மது இப்பராகிம்மிற்கும் அவரது சகோதரர் சுலைமானுக்கும் இடையே ஏற்பட்ட ஆவணம் ஆகும். மேற்படி ஆவணத்தின்படி ஒரு சில சொத்துக்களுக்கு பட்டா மாறியுள்ளது, ஒரு சில சொத்துக்களுக்கு பட்டா மாறவில்லை. தாவா 1 வது இலக்க சொத்திற்கு பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் எனது அப்பா பெயரில் உள்ளது. வா.சா.ஆ.8 ஆவணத்தின்படி தாவா 1ம் லக்க சொத்திற்கு 2ம் பிரதிவாதி பெயரில் தான் பட்டா உள்ளது என்றால் சரியல்ல. தாவா 1ம் லக்க சொத்தை 1ம் பிரதிவாதிக்கு பாகத்தில் கிடைத்து அதை அவர் 2ம் பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் மூலம் பாத்தியப்படுத்தி அதன்அடிப்படையில் 2ம் பிரதிவாதி பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 2ம் லக்க சொத்து வா.சா.ஆ.8

ஆவணத்தின் படி 1ம் பிரதிவாதிக்கு பாகத்தில் ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. தாவா 2ம் லக்க சொத்தை 1ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். தேசிய நெடுஞ்சாலை விரிவாக்கத்திற்கு நில ஆர்ஜீதம் செய்யப்பட்ட சொத்து எனது தாத்தா உயிருடன் இருந்த காலத்தில் எனது அப்பாவிற்கு எழுதிக்கொடுத்த சொத்து ஆகும். எனது தாத்தா எனது அப்பாவிற்கு எந்த ஆவணமும் எழுதிக்கொடுக்கவில்லை. நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா 2ம் லக்க சொத்திற்கு 3ம் பிரதிவாதி பெயரில் பட்டா உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்துக்களுக்கும் எனக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எனது தகப்பனார் 1ம் பிரதிவாதியை மோசடி செய்து அவருக்கு சேரவேண்டிய நில ஆர்ஜீத இழப்பீட்டுத் தொகையை அபகரித்துவிட்டார் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் பெற்ற நில ஆர்ஜீத இழப்பீடு தொகையை 2ம் வாதி பெற்றுக்கொண்டார் என்றால் சரியல்ல . 2ம் வாதியை இந்த வழக்கில் விசாரிக்க தயாராக உள்ளேன். தாவா சொத்துக்கள் கூட்டு அனுபவம் மற்றும் பாத்தியத்தில் இல்லை என்றும் தாவா சொத்துக்கள் 1ம் பிரதிவாதிக்கு வா.சா.ஆ.8 ஆவணத்தின்படி பாகத்தில் கிடைத்து அதன்பின்னர் அவர் எழுதிக்கொடுத்த ஆவணங்கள் அடிப்படையில் 2 மற்றும் 3 பிரதிவாதிகள் தாவா சொத்தை அடைந்து தனித்து அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் கூட்டு அனுபவத்தில் இல்லாததால் நான் செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம் தவறானது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.8 ஆவணம் ஏற்பட்ட பின்பு 25 வருடங்கள் கழித்து தான் எனது தகப்பனார் இறந்து போனார் என்றால் சரிதான். எனது தகப்பனார் 2019ல் இறந்துபோனார். எனது தகப்பனார் வா.சா.ஆ.8 பாகப்பிரிவினையை ஒப்புக்கொண்டதால் தான் அவர் உயிருடன் இருந்த காலத்தில் தாவா சொத்துக்களை பொறுத்து எந்த தாவாவும் மேற்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. நான் எனது தகப்பனார் இறந்தபின்பு காலம் கடந்து 1 முதல் 3

பிரதிவாதிகளின் சொத்தை அபகரிக்கவேண்டும் என்ற கெட்ட நோக்கத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
மானாமதுரை